**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை

**IA.No.03/2025 in OS.No.188/2021**

**TNTM 03000341/2021**

கீதா ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

ரகு ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 09.01.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.திருஞானம்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.சரவணபாபு,MBA.,ML., திருமதி.P.இளமதி,B.A.ML., ஆகியோர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் வா.சா.1 ரகு குறுக்கு விசாரணையில் கூறியதுபோல் வாதி வீட்டு கடன் பெற்றதற்கான ஆவணங்களையும், வங்கி கணக்கு புத்தகத்தையும் நீதிமன்றத்தில் சமர்பிக்க உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர், இம்மனுவின் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கை மனுதாரருக்கு எதிராக, எதிர்மனுதாரர்/வாதி தாவா புரோநோட் தொகையை மனுதாரர் செலுத்த வேண்டுமென தவறான தாவா தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன வழக்கு எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகளை இன்று 28.01.2025ல் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் வாதியானவர் கடந்த 05.08.2023 அன்று மனுதாரர் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யும்போது பிரதிவாதியாகிய மனுதாரருக்கு

பணம் தந்தது வீட்டு கடன் பெற்று பணம் தந்தார் என்றும், மேலும் வீட்டு கடன் ஆவணங்களை மனுதாரர் ஒப்படைக்க தயாராக உள்ளார் என்றும், வீட்டு கடன் வங்கி கணக்கு வந்ததற்கான வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்று குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார். மேற்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதால் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தால் வழக்கின் உண்மை தன்மை அறியவும் மனுதாரர் நியாயத்தை பெறவும் மிகவும் அவசியமாயும் நியாயமாயும் உள்ளது என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>

எதிர்மனுதாரர்/வாதி தனக்காக இந்த கவுண்டரை தாக்கல் செய்கிறார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த கவுண்டரில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே உண்மைக்கு மாறாமல் நிரூபிக்க கடமைப்பட்டவர். மேற்படி வழக்கில் கடந்த 05.08.2023 அன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்மனுதாரர்/வாதியினை குறுக்கு விசாரணை செய்த போது வீட்டு கடன் பெற்று என்னுடைய செலவு போக மீதமுள்ள பணத்தினை கொடுத்ததாக எதிர்மனுதாரர்/வாதி கூறியிருந்தார். அதேபோல் குறுக்கு விசாரணையில் மேற்படி ஆவணத்தினை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தயாராக உள்ளதாக கூறியிருந்தார். மேலும் PW1 Cross-ல் பிரதிவாதி தரப்பினில் வாதி பெயரில் உள்ள வீட்டின் பேரில் வீட்டு கடன் Sriram Finance Limited என்ற நிறுவனத்தில் Loan No.CETPCTF1712290007 31.12.2017 அன்று வீட்டுக்கடன் பெற்று எதிர்மனுதாரர்/வாதி அசல் மற்றும் வட்டியுடன் தற்போது வரை Sriram Finance Limited-க்கு மிகுந்த சிரமத்திற்கிடையே செலுத்தி வருகிறார். வாதி பெயரில் பெற்ற வீட்டுக்கடன் கணக்கு அறிக்கையை எதிருரையுடன் தாக்கல் செய்துள்ளார்.

3. மேலும் மனுதாரர் தற்போது வேண்டுமென்றே மேற்படி ஆவணங்கள் வேண்டி தாக்கல் செய்துள்ளது தேவையற்றது. மேலும் தற்போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் Proof Affidavit தாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய நிலையில் மேற்படி மனுவினை மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து வழக்கினை இழுக்கடிக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது எவ்விதத்திலும் அனுமதிக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். மேலும் கவனக்குறைவால் இவ்வெதுருரையில் சொல்லப்படவேண்டிய சங்கதிகள் ஏதேனும் விடுபட்டிருந்தால் கூடுதல் எதிருரை தாக்கல் செய்வதாக கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. **பிரச்சனைக்கான தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் இந்த மனுதாரர்/பிரதிவாதி மீது புரோநோட் தொகையை வசூல் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 தனது 05.08.2023 தேதி குறுக்கு விசாரணை சாட்சியத்தில், பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தொகை வீட்டு கடனாக பெற்ற பணம் என்றும், வீட்டுக்கடன் ஆவணங்களை ஒப்படைக்க தயாராக உள்ளேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வீட்டு கடன் ஆவணங்களையும், வாதியின் வங்கி கணக்கு புத்தகத்தையும் ஆஜர்படுத்த உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வீட்டு கடன் பெற்று தன்னுடைய செலவு போக மீதமுள்ள பணத்தை கொடுத்ததாகவும், அந்த ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வாதி பெயரில் உள்ள வீட்டின் பேரில் Sriram Finance Limited வீட்டு கடன் Loan No.CETPCTF1712290007 பெற்றுள்ளார். மேற்படி கடனுக்கான கணக்கு அறிக்கையை இந்த எதிருரையுடன் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணை செய்யவேண்டிய நிலையில், வழக்கை காலம் கடத்தவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். கடந்த 05.08.2023ம் தேதி வா.சா.1ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தொகை வீட்டு கடனாக பெற்ற பணம் என்றும், வீட்டு கடன் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையுடன் அவர் Sriram Finance Limited என்ற நிறுவனத்தில் Loan No.CETPCTF1712290007 என்ற 31.12.2017 தேதியிட்ட வீட்டுக்கடன் பெற்றதற்கான கணக்கு அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வீட்டு கடன் தனது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதாக கூறி சாட்சியம் அளிக்கவில்லை. எனவே மனுவில் கோரியுள்ளபடி பிரதிவாதி தரப்பில் வீட்டு கடன் வாங்கியதற்கான கணக்கு அறிக்கை எதிருரையுடன் தாக்கல் செய்திருப்பதால், இம்மனு பகுதியளவில் அனுமதிக்கப்படுகிறது. வாதியின் வங்கி கணக்கை தாக்கல் செய்யும்படி கோரியுள்ள

பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், வீட்டு கடன் சம்மந்தமான கணக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இம்மனு பகுதியளவு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.02.09 17:32:16 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-**</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.02.09 17:32:26 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.